## கீழக்கரை நகர்மன்ற 02.11.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் –1**

சிறப்பு சாலை மேம்பாட்டுத் திட்டம் (Special Road Programme) 2020–21ன் கீழ் இந்நகராட்சிப் பகுதிகளில் சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பணிகள் தேர்வு செய்து ரூ.100 லட்சத்திற்கு (அரசு மான்யம் 90% மற்றும் அரசு நிதி நிறுவனம் மூலம் கடன் தொகை 10%) விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து கருத்துரு அனுப்பி வைக்குமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 02.11.2020–ம் தேதிய தொலைபேசி செய்தியில் (Telephone message) தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு சாலைப் பணிகள் தேர்வு செய்து பொறியாளர்களால் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட 1–வது வார்டு இரண்டு குறுக்கு சாலை, 2–வது வார்டு அன்புநகர் 2–வது குறுக்கு தெரு, 3–வது வார்டு புதுகிழக்குத் தெரு, கிழக்குத் தெருவில் மூன்று குறுக்கு சாலை, பட்டாணியப்பா தர்ஹா I, II, III சாலை, 6–வது வார்டு ஒரு குறுக்கு சாலை, 10வது வார்டு சேரான் தெரு மற்றும் 12வது வார்டு ஜின்னா தெரு குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் பேவர்கல் சாலை அமைக்கும் பணி | 2.150 | 100 |

2020–21ம் ஆண்டு சிறப்பு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் (Special Road Programme) கீழ் ரூ.100 லட்சத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரும் பொருட்டு, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு வழிமுறையாக கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் திட்டத்தில் சாலைகள் அமைக்கும் பணிக்கு 90% அரசு மான்யம், 10% அரசு நிதி நிறுவனம் மூலம் கடன் அனுமதிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய வழிமறையாக கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.789 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் –2**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர் பைப்லைன் பகுதிக்கும் பணிகளால் சாலைகள் பழுதடைந்து மேடு பள்ளங்களாக உள்ளது. தற்போது பெய்து வரும் மழையின் காரணமாகவும் சாலைகள் பழுதுதடைந்துள்ளதால் மழைநீர் மற்றும் கழிவுநீர் சாலைகளில் தேங்கி பொதுமக்கள் சாலைகளில் நடந்து செல்வதற்கும் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். மேலும் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைத்து தர கோரி அரசியல் கட்சிகள் மற்றும் பொதுநல அமைப்புகள் நகராட்சியினை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியுள்ளனர்.

ஆகவே, பொதுமக்களின் நலன் கருதியும், பணியின் அவசியம் கருதியும் இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைத்து பேவர்கல் சாலை (Paver Block Road) அமைக்கும் பணிகள் செய்வதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.8,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 548 /2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, 21 வார்டு பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள பேவர்கல் சாலைகள் பழுதடைந்துள்ளதை சீரமைக்கும் பணி செய்வதற்கு ரூ.8,50,000/–க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.790 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் –3**

இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் கிராமத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கு வளாகத்தில் தினமும் சேகாரமாகும் குப்பை கூளங்களை பயோமைனிங் முறையில் பிரித்து உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி உரக்கிடங்கில் தினசரி சேகரமாகும் புதிய குப்பை கழிவுகளை நகராட்சி உரக்கிடங்கின் கடைசிப் பகுதியில் கொட்டும் வகையில் அந்த இடத்தில் ஏற்கனவே குவிந்துள்ள குப்பை கூளங்களை சமப்படுத்துவதற்கும், எதிர்வரும் மழைக்காலங்களில் பொதுசுகாதார வாகனங்கள் குப்பை கழிவுகளை கொண்டு சென்று கொட்டுவதற்கும் ஏதுவாக JCB இயந்திரம் மூலம் உரிய முறையில் உரக்கிடங்கினை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.5,00,000/–க்கு இந்நகர் மன்றத்தில் 30.09.2020–ந்தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. றது.

அதன் அடிப்படையில், மேற்காணும் உரங்கிடங்கில் பயோமைனிங் முறையில் குப்பை கழிவுகளை பிரித்து உரமாக்கும் பணி செய்யும் பொருட்டு புதுக்கழிவுகளை (Fresh waste) உரக்கிடங்கின் கடைசிப் பகுதியில் கொட்டும் வகையில், அந்த இடத்தினை JCB இயந்திரம் மூலம் சமப்படுத்தும் பணிகள் செய்ய எரிபொருள் செலவினம் மற்றும் டிரைவர் படி உட்பட விலை குறிப்பிட்டு 05.10.2020–ந் தேதி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | RST டிரான்ஸ்போர்ட்<br>JCB சர்வீசஸ் அன்ட் எர்த் மூவர்ஸ்,<br>எண்.27, ஈசா பள்ளிவாசல் தெரு,<br>நஜிமா மஹால் எதிர்புறம், இராமநாதபுரம். | 1300<br>(Per hour) |
| 2 | ஸ்ரீ முருகன் லாரி புக்கிங் ஆபிஸ்,<br>எண்.78 கே.கே.ரோடு,<br>சாயல்குடி, இராமநாதபுரம் மாவட்டம். | 1450<br>(Per hour) |
| 3 | APS எர்த் மூவர்ஸ்,<br>எண்.74/33, இளையான்குடி சாலை கோர்ட் எதிர்புறம்,<br>பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். | 1500<br>(Per hour) |

**(கோப்பு எண்.1036/2020/எச்1)**

<u>அலுவலக குறிப்பு</u>

இந்நகராட்சி உரக்கிடங்கில் JCB இயந்திரம் மூலம் குப்பை கழிவுகளை சமப்படுத்தும் பணிகள் செய்வதற்கு வாகன வாடகை ஒரு மணி நேரத்திற்கு ரூ.1300/—க்கு (வண்டி வாடகை, எரிபொருள், டிரைவர் படி உட்பட) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள RST டிரான்ஸ்போர்ட், JCB சர்வீசஸ் அன்ட் எர்த் மூவர்ஸ், இராமநாதபுரம் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.791 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/—ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**